அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.—(குறள்.)

"From Wisdom's vaunted lore what doth the learner gain
If as his own he guard no other's souls from pain."

TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் VI.] **SEPTEMBER**, 1906–ஹு செப்டெம்பர். [இலக்கம் 3.

வாயில்லாப் பிராணிகளிடத்தில் எனக்கு எப்படி இரக்கம் உண்டாயிற்று.

ஒரு பாடசாலையில் சுந்தரம் என்கிற நல்ல பையன் ஒருவன் இருந்தான். அவனிடத்தில் உபாத்தியாயருக்கும், மற்றப்பிள்ளைகளுக்கும் பிரீதி அதிகம். கொடுத்த வேலையைச் சரியாகச் செய்ய அவன் ஒருநாளும் தவறினதேயில்லை; பிரதிதினம் பாடத்தைச் சரியாகவே ஒப்புவித்து வருவான். ஒருநாள் அவனுக்குக் கொடுத்த கணக்கு மிகக் கடினமாயிருந்ததனால், அவன் வேறு சிந்தையின்றி அதே ஞாபகமாய்த் தலைகுனிந்து கணக்குப் போட்டுக்கொண்டிருந்தான். அப்படியிருக்கையில் உபாத்தியாயர் கையில் பிரம்பை எடுத்துக்கொண்டு, அவனண்டை வந்து பிரம்பை வீசி அவனை அதட்டினார்.

அதுகண்டு, சுந்தரம் மிகவும் பயந்து, "ஐயா, ஐயா! நான் என்ன தப்புச் செய்தேன்?" என்று தட்டித் தடுமாறிப் பேசி நடுங்கி நின்றான்.

அப்பொழுது உபாத்தியாயர் அந்தப் பையனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே "குழந்தாய்! விசேஷமொன்றுமில்லை; பயப்படாதே. நீ ஒரு தப்பும் செய்யவே இல்லையா? யோசித்துப்பார்" என்றார்.

அதைக் கேட்டுக் கணக்குப் போட்டுக்கொண்டிருந்த பையன் சரேலென்று எழுந்து, "ஐயா! நான் என்ன குற்றம் செய்தேன்? எனக்கொன்றும் ஞாபகமில்லையே, செய்த தப்பு இன்னதென்பதைத் தெரிவித்தால் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறேன் அதைத் தெரிவிக்காமலே அடியேன் மீது இப்படிக் கோபிப்பது நியாயமா?" என்று வணக்கமாய் வேண்டினான்.

அதற்கு உபாத்தியாயர், "நீ செய்த தப்பு ஒன்றும் உனக்கு ஞாபகமில்லையா?" என்று சொல்லிக் கையிலிருந்த பிரம்பை மறுபடியும் ஓங்கினார்.

அதைப்பார்த்து வகுப்பிலிருந்த பிள்ளைகள் எல்லாரும் சரேலென்று எழுந்தார்கள். சுந்தரத்தினிடத்தில் பிள்ளைகளுக்குப பிரீதி அவ்வளவு அதிகம். அவர்கள் அப்படியே உபாத்தியாயர்மேல் விழுந்து கலகம் செய்வார்கள்போல் தோற்றியது. அதைக் கண்டு உபாத்தியாயர், "எல்லாரும் உட்காருங்கள். ஒருவரும் இடத்தை விட்டு நகரக்கூடாது" என்று கண்டிப்பாய் உத்தரவு பண்ணினார். பிள்ளைகள் தமக்குப் பிரியமில்லாமலே உபாத்தியாயர் கட்டளையை மீறக்கூடாதென்று தம்மிடத்தில் உட்கார்ந்தார்கள். உபாத்தியாயருக்குப் பைத்தியம் பிடித்ததோ என்று பிள்ளைகளெல்லாரும் நினைத்தார்கள். நம்முடைய சுந்தரமும் முகத்தில் உதிரம் கொதிக்கவும், தோள்கள் துடிக்கவும் தன்னிடத்தில் உட்கார்ந்தான்.

அப்பொழுது உபாத்தியாயர் அந்தப் பையனைப் பார்த்து, "சுந்தரம்! நேற்று நீ உன் தகப்பனுடைய குதிரையையும், வண்டியையும் ஓட்டிக் கொண்டு போனாயல்லவா? அப்படிப்பட்ட கேடுகெட்ட குதிரை உனக்கு அகப்பட்டதே யென்று எனக்கு மிகுந்த விசனமுண்டாயிற்று" என்று சாந்தமாகச் சொன்னார்.

அதைக் கேட்டுச் சுந்தரம், ''ஐயா! எங்கள் குதிரையைக் கேடுகெட்ட குதிரையென்று என் சொல்கிறீர்கள்? அப்படிப்பட்ட நல்ல குதிரை இவ் விடத்திலெங்கும் அகப்படாதே'' என்று வெகு தீர மாக மறுமொழி கூறினன்.

அதற்கு உபாத்தியாயர், ''பிள்ளாய்! நீ அப்ப டியா சொல்லுகிறுய்? ஆனல், அது நேற்று மிகவும் சோம்பேறியாய் இருந்ததாகத் தோன்றுகிறது; அது உண்மைதானே'' என்ருர்.

அதைக் கேட்டபோது சுந்தரத்துக்குக் கோபம் வந்துவிட்டது; அவன் தோள்கள் துடிக்க ஆரம் பித்தன. ''எங்கள் குதிரையையா நீங்கள் சோம் பேறிக் குதிரையென்று சொல்லுகிறீர்கள்? அதைப் போல விருப்பி வேலைசெய்கிற பிராணி இந்நாட் டில் வேறென்று உண்டோ? அது ஒருபொழுதும் வேலைசெய்யப் பின்வாங்குவ தில்லையே'' என்று அதிகமான ஆக்ரோஷத்துடனே சொன்னன். குதி ரையைச் சோம்பேறியென்று சொல்வதையே கேட்கப் பொருத இந்தப் பையன், குதிரையைச் சிறுமாறு பண்ணுகிருனென்று சொல்லக் கேட் டால், எப்பாடுபடுவானே தெரியாது.

அதன்மேல் உபாத்தியாயர் கேட்டதாவது, ''அப்படியா, நல்லது சுந்தரம். நேற்று நீ குதிரையை ஒட்டிக்கொண்டு போகும்பொழுது நான் பார்த் தேன்; அது சரியாகப் போய்க்கொண்டிருந்ததா கவே எனக்குத் தோன்றிற்று. அந்தச் சமயத்தில் நீ திடீரென்று எழுந்து உன் சாட்டையால் அதைக் குருட்டடியாய் அடித்தாயல்லவா? அப்பொழுது அந்த எளிய ஜீவன் தலையை அசைக்க, நீ மறுபடி யும் சாட்டையால் ஒங்கி அடித்தாய். நானுன்னைப் பிரம்பாலடிக்கும்பொழுது, 'என்னை என் இப்படி அடிக்கிறீர்' என்று கேட்பதற்காக என்னை நீ திரும் பிப் பார்ப்பதுபோலவே, நீ அடித்தபொழுது அந் தக் குதிரை உன்னைத் திரும்பிப் பார்த்ததல்லவா? அது போதுமான சுமையை இழுத்துக்கொண்டு சரியாய் நடந்துபோகையிலும், அதை நீ பின்னும் பலதரம் சாட்டையால் சுரீலென்று அடித்தாய். உன் குதிரை சொன்னபடி கேட்டுச் சரியாய் நடக் கிற ஜீவனென்று நீயே உன் வாயால் ஒப்புக்கொண் டாய். அப்படிப்பட்ட நல்ல ஜீவனை நீ வீணுய் அடித்துத் துன்பப்படுத்தினயே; அப்படியே, நான் சொன்னபடி கேட்டு நடக்கிற நல்ல மாணக்கனை உன்னை இப்பொழுது நான் அடிக்கத் தடை யென்ன? ஒருவனுக் கேற்பட்ட நியாயம்தானே மற்றெல்லாருக்கும்'' என்ருர்.

அதைக் கேட்டபொழுது, சுந்தரம் மிகவும் விச னமடைந்து தன் தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டான். அவன் வயதுவந்த பெரிய பைய னும் விம்மி விம்மி யழுதுகொண்டே எழுந்து, ''ஐயா! நீங்கள் சொல்வது சரிதான். எனக்கு இப்பொழுது புத்தி வந்தது. நான் செய்தது பெரிய குற்றமே. அதற்காக நீங்கள் என்னைத் தண்டிக்க வேண்டியது அவசியந்தான். நான் சிறிதும் புத்தி யில்லாமல் சாட்டையை என் குதிரையினிடத்தில் உபயோகப்படுத்தினேன். அந்த வாயில்லா ஜீவன் பட்டபாட்டின் பயனை நான் இப்பொழுது அனு பவித்து அறிந்துகொள்ளவேண்டியது நியாயந்தான். இப்பொழுது வீட்டுக்குப் போனவுடனே, நான் தெரியாமல் செய்த காரியத்திற்காக என் குதிரை யை மன்னிப்பு கேட்டுக்கொள்வேன்'' என்ருன்.

''இப்பொழுது சரிதான்; நானும் உன்னைத் தண்டிக்காமல் மன்னித்தேன். பிள்ளைகளே! இனி நீங்கள் உங்கள் பாடத்தைக் கவனியுங்கள்'' என்று உபாத்தியாயர் சொன்ஞர். பிள்ளைகளெல்லாம் கைதட்டிக் கொண்டாடிச் சந்தோஷித்து, இனித் தாமும் உபாத்தியாயர் சொன்னபடியே வாயில்லா ஜீவன்களிடத்தில் இரக்கமுள்ளவர்களா யிருக்க வேண்டுமென்று தெரிந்துகொண்டார்கள்.

தன் எஜமானனுக்காகக் காத்துக் கொண்டிருந்தது.

ஒரு பிரபு தன் ஊரைவிட்டு வேறொரு நகரத் திற்குப் போவதாக நிச்சயித்து, அப்படியே புறப் பட்டுப் போகும்போது, தன்னுடைய அருமை யான நாயை அண்டை வீட்டுக்காரனிடத்தில் விட் டுப்போனன். அவன் புறப்பட்டுப்போவது நாய்க் குத் தெரியாம லிருக்கவேண்டுமென்று அவன் புறப்படும் தருணத்தில் அதைச் சிறிது தூரத்திற் கப்பால் ஒரு தோட்டத்திலே கொண்டுபோய்க் கட்டிவைத்தார்கள்.

தன் எஜமானனைவிட்டுப் பிரிந்ததனல் அதற்கு உண்டான துயரம் இப்படிப்பட்ட தென்பதைக் கீழே குறிக்கும் கதையால் ஒருவாறு ஊகித்து அறிந் துகொள்ளலாம். தோட்டத்தில் கட்டிவைத்த நாய் தனியேயிருக்கப் பிரியப்படாமல் எப்படியோ சங் கிலியை யறுத்துக்கொண்டு வெகு வேகமாய்த் தான் முன்னே குடியிருந்த வீட்டுக்கு ஓடிவந்தது. அது வந்து பார்த்தபொழுது அந்த வீட்டிற்கு வேறு யாரோ குடித்தனம் வந்துவிட்டார்கள். இனி அந்த நாய் செய்யவேண்டுவதென்ன? தன் எஜமானனைத் தான் எங்கே கண்டுபிடிப்பது என்கிற விசாரம் அதின்மனதில் குடிகொண்டது. ஐயோ! வாயில்லா ஜந்துக்களுக்கிருக்கும் மிகவும் பரிதாபமான நிலை இதுதான். 'என் எஜமானன் எங்கே?' என்று எவரையாவது கேட்டுத் தெரிந்துகொள்ள அதற்கு வாயுண்டா? இல்லையே! நாம் எதாவது சொன் னலும் அதைத் தெரிந்துகொள்ளவும் அதற்குத் திறமையில்லையே! ஐயோ பாவம், அவை என்ன செய்யும்!

ஆனலும், நம்முடைய நல்ல நாய் தனக்குள்ள யுக்தி ஆலோசனைகளைக்கொண்டு ஒருவாறு ஊகித்

துத் தன் எஜமானன் எந்த இருப்புப்பாதை நிலையில் வண்டியேறினுனே, அவ்விடத்தை மோப்பத்தால் உணர்ந்து உடனே அவ்விடத்திற்குப் போய்ப் பார்த்தது. அங்கே முழுமையும் தேடியும் அவன் அகப்படாமையால், வேறென்றும் தோன்றாமல் அது அங்கேயே தனியாய்க் காத்துக்கொண்டிருந்தது. தன் எஜமானன் மறுபடியும் திரும்பி அங்கே வண்டியை விட்டிறங்கி வருவான் என்று எதிர்பார்த்து, அவ்விடத்தை விட்டசையாமல் அது அங்கேயே இருந்ததுபோலும். யார் எவ்வளவு அதட்டி ஓட்டினாலும், அது அப்புறம் போகவில்லை. யார் என்னசெய்தாலும் எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு வாயைத் திறவாமல் விசாரத்தோடே படுத்துக்கொண்டிருந்தது.

இதனுடைய நல்லகாலம் அந்த வண்டிநிலை எஜமானனுக்கு இந்த நாய் நன்றாய்த் தெரியும். அதனால் அவன் இதன் பரிதாபத்தைப் பார்த்து மனமிரங்கி, தன்னால் கூடியவரையில் இதைச் சந்தோஷப்படுத்தப் பார்த்தான். இதற்கு வேண்டிய தீனியையும் கொடுத்துத் தின்னச்செய்து பார்த்தான்; இது தீனியைத் தொட்டுப் பார்க்கவேயில்லை. என்னசெய்தாலும் எழுந்துபோகாமலும் தீனியைத் தொடாமலும் விசாரப்பட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்து, தன் எஜமானனை விட்டுப் பிரிந்த துக்கத்தினாலேயே இது இப்படிச் சோர்ந்து கிடக்கிறதென்று தெரிந்து அந்த வண்டிநிலைத் தலைவன், 'உன் நாய் துக்கத்தினால் சாகக் கிடக்கிறது' என்று அதன் எஜமானனுக்கு உடனே ஒரு கடிதமெழுதினான். இதற்குள் அவன் அந்த ஊரைவிட்டுப்போய் இரண்டு வாரமாகிவிட்டது. அவன் இந்தக் கடிதத்தைப் பார்த்த தக்ஷணமே திரும்பி அங்கிருந்து பிரயாணப்பட்டு வண்டியேறி இவ்விடத்தில் வந்திறங்கினான். அவன் இறங்கினவிடத்தில் அவனுடைய நன்றி மறவாத நல்ல நாய் பசியாலும், விசனத்தினாலும் மிகவும் இளைத்துச் சோர்ந்து படுத்துக்கொண்டிருந்தது.

தன் எஜமானன் வண்டியைவிட்டு இறங்கிவருவதைக் கண்டபோது நம்முடைய நாய்க்குண்டான சந்தோஷத்தை நாம் என்னென்று சொல்லலாம்? அவனைப் பார்த்தவுடனே அது வாலை யாட்டிக்கொண்டு துள்ளி எழுந்து அவன்மேல் எழும்பிக் குதித்து, தனக்குண்டான அளவில்லாத ஆனந்தத்தை வெளியிட்டது. அவ்வளவோடும் அது திருப்தியடையாமல் தாங்கள் குடியிருந்த பழைய வீட்டிற்கு வரும்படி அவனைத் துணியைப் பிடித்திழுத்தது. அவன் அந்த வீட்டிற்கு மறுபடியும் போகாத காரணம் இன்னதென்பதை அந்த நாய் தெரிந்துகொள்ளவில்லை. ஆனாலும், அவ்வளவோடு திருப்தியடைந்து அவனோடுகூடவே போய்விட்டது. பின்பு ஒருநாளும் தான் அந்த நாயைவிட்டுப் பிரிந்ததில்லையென்று அந்த எஜமானனே மற்றொரு தருணத்தில் சொல்லுகிறான்.

ஒரு சூரன் மரணம்.

ஒன்றாய்ச்சேர்ந்து விநோதமாய் ஓடித் திரிந்துகொண்டிருந்த இரண்டு நாய்கள் ஒரு சமயத்தில், மின்சாரவண்டியோடும் பாதையோரமாய்ப்போய்க்கொண்டிருந்தன. அவைகளிலொன்றாகிய சிறிய நாய் அப்பொழுது வண்டியோடும் பாதையின்மீது போக, அத்தருணத்தில் வண்டி சமீபத்தில் வந்துவிட்டது. அதன் பக்கத்தில் போய்க்கொண்டிருந்த பெரிய நாய் அந்த அபாயத்தைப் பார்த்து, தன் சிறிய தோழனைக் காப்பாற்றும்பொருட்டுத் தான் அந்தப் பாதையின்மீது பாய்ந்தது. பாய்ந்தவுடனே அது தன் தோழனைக் கழுத்தில் வாயினால் கவ்விக்கொண்டு வெகு சீக்கிரமே திரும்பிவிட்டதாயினும், ஐயோ! அது பாதையைவிட்டு வெளியே வருவதற்குள் வண்டி அதன்மேல் ஓடி அதற்குக் கொடிய காயம் பட்டது. பெரிய நாய்க்குப் பிராணனே போய்விட்டது; அது வாயில் கவ்விக்கொண்டிருந்த சிறிய நாய்க்கோ, முன்னங்காலிரண்டுமாத்திரமே துண்டிக்கப்பட்டன. இந்த நாயைப்போலத் தன்னுயிரைக் கொடுத்துத் தோழனைக் காப்பாற்றும் உபகார சிந்தையுள்ளவர்கள் மனிதர்களில் இருக்கிறார்களோ? வாரம் தப்பினாலும் தப்பும்; எதாவது ஒரு நாய், தன் தோழன் உயிரைக் காப்பாற்றுவது தப்புவதில்லை. சில தருணங்களில் மேலே சொல்லியதுபோல நாய் தன் உயிரைக் கொடுத்தாயினும், தோழனுயிரைக் காப்பாற்றுவது நிச்சயம்.

குதிரைவாலைக் கூழைவாலாக்குதல்.

புருஷர்களாகட்டும் ஸ்திரீகளாகட்டும் செய்யும் பலவகைக் குற்றங்களில் மிகவும் இகழத்தக்கதான கொடிய குற்றம், குதிரைவாலைக் கூழைவாலாக்குவதேயாம். இப்படிப்பட்ட குற்றம் செய்பவர்களுக்கு, 100 டாலர் அபராதம் விதித்துத் தண்டிக்கும்படியாக அமெரிக்காவில் அனேகம் மாகாணங்களிலே, சட்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆனாலும், திருட்டுத்தனத்துக்கெல்லாம் இருட்டுத்தானே மிகவும் பிரியமான இடம். ஆகவே, வெறுக்கத்தக்க காரியங்களெல்லாம் ரகசியமாகவே செய்யப்படுவதால், இந்தத் திருட்டுவேலையைக் கண்டுபிடித்து அபராதம் விதிப்பது அசாத்தியமான காரியமாக இருக்கிறது.

இவ்விஷயத்தில் தமக்குண்டான மிகுந்த கோபத்தை ஒருவர் பின்வருமாறு வெளியிட்டிருக்கிறார். தமது உடம்பில் வந்து மொய்க்கும் ஈ, கொசு முதலானவைகளை ஓட்டிக்கொள்வதற்காகவே யல்லவா, ஸகல ஜீவதயாபரரான கடவுள் நம்மைப்போலக் கைகளில்லாத குதிரைகளுக்கு நீண்ட வால்மயிரைத் தந்தருளியிருக்கிறார்? அப்படிப்பட்ட அரு

மையான மயிரைக் கத்தரித்துக் குதிரைகளைக் கூழைவாலாக்கும் கொடியவர்களை நாம் என்ன செய்யவேண்டும் அறிவீர்களா? இரண்டு கைகளையும் பின்னல் சேர்த்துக் கட்டிவிட்டு, ஈக்கள் அதிகமாக மொய்த்துக்கொண்டிருக்கிற வெல்லத் தொட்டி முதலான இடங்களில் அவர்களைத் தள்ளி ஏனென்று கேட்பாரில்லாமல் கதவைப் பூட்டிவிட்டால், எனது எரிச்சல் ஒருவாறு அடங்கும். இது மிகவும் கொடுமையான காரியமென்று சிலருக்குத் தோற்றலாம். நமக்கு மிகவும் அன்புள்ள நேசனும் வேண்டிய உதவிசெய்கிற வாயில்லா ஜீவன்களின் வாலையறுத்து வீணான வருத்தத்தையுண்டாக்குகிறவர்களுக்கு இந்தத் தண்டனை போதாதென்றே சொல்லலாமே. ஈ, கொசு முதலானவைகள் வந்து சுரீலென்று கடித்துக் கொட்டினால், ஐயோ, பாவம்! வாலில்லாக் குதிரைகள் என்ன செய்யமாட்டும்! இந்த உபத்திரவம் ஒருநாளா, இரண்டுநாளா? சாகிறவரையில் அவை யப்படித்தானே உபத்திரவப்பட்டுப் பிராணனை விடவேண்டும்?

இங்கிலாந்திலே ஈக்களே இல்லையாகையால், அங்கே குதிரையின் வால்மயிரைக் கத்தரிப்பது குற்றமாகாதென்று சிலர் சாக்குச் சொல்லுகிறார்கள். 'ஒரு சமயத்தில் நான் அங்கே வண்டியிலே ஏறிக்கொண்டு போனேன்; ஈக்களும் கொசுகுகளும் நூற்றுக்கணக்காயல்ல, ஆயிரக்கணக்காய் வந்து மொய்த்துக்கொண்டதைப் பார்க்க எனக்கு மிகவும் பரிதாபமாயிருந்தது. அப்படிப்பட்ட தேசத்தில் வாலில்லாக் குதிரைகளை எப்படி வைத்துக்கொண்டிருக்கிறார்களோ? அறியேன். ஈக்கள் அதிகமாயுள்ள தேசாந்தரங்களுக்குச் சேனைகளை யனுப்பும்பொழுது, இந்த வாலில்லாக் குதிரைகளை எப்படி யனுப்புகிறார்களோ, எனக்கு மிகவும் ஆச்சரியமாக விருக்கிறது' என்று அத்தேசம் போன ஒருவர் சொல்லுகிறார்.

இது மிகவும் அற்பமான குற்றமாயிருந்தாலும், இந்தக் கொடுமையினின்றும் தப்பித்துக்கொள்ள வாயில்லாஜீவனான குதிரைகளுக்கு வழியில்லையே! ஆகையால், மனிதர்களானாலும், மிருகங்களானாலும், நமக்குக் கீழ்ப்பட்ட பிராணிகளிடத்தில் நாம் உபேக்ஷையாயிருந்து உபத்திரவமுண்டாக்காமல், கருணைபாராட்டுவது நமது முக்கியமான கடமையாம்.

ஒரு புதுமையான கதை.

பட்டணத்திலே வசித்துக்கொண்டிருந்த ஒரு குடும்பத்தார் ஒரு சமயத்தில் இடம் மாறவேண்டுமென்று கிராமாந்தரம்போவதாகப் புறப்பட்டார்கள். அவர்களுடைய நாயும் ஒன்று அவர்களோடு கூடவே புறப்பட்டுப் போயிற்று. அவர்கள் வீட்டிலே வளர்த்த பூனைமாத்திரம் ஒன்று தனியாய் அங்கேயே நிறுத்தப்பட்டது. இப்படியிருக்க, அவர்கள் போகவேண்டிய கிராமம் போய்ச் சேர்ந்த மறுநாள் அவர்களுடைய நாய் காணமல் போய்விட்டது. அதற்காக அவர்கள் விசனப்பட்டு அதைத் தேடிக்கொண்டிருக்கையில், இரண்டு மூன்றுநாள் கழித்து அந்த நாய், தன்னோடு வளர்ந்த பூனையையும் அழைத்துக்கொண்டு திரும்பி வந்து சேர்ந்தது. இந்தக் கதையினால் நாம் தெரிந்துகொள்ளும் நீதியென்ன? மனிதர்களைப்பார்க்கிலும் வாயில்லா ஜீவன்களுக்குத் தம்மோடு பழகின பிராணிகளிடத்தில் பக்ஷ மதிகமென்றும், அவைகளுக்கும் ஆலோசிக்கும் திறமையுண்டென்றும் இதனால் நமக்கு நன்றாக விளங்குகிறதல்லவா?

ஒருவர் இந்தக் கதையை மிகவும் சிறப்பித்து வாயில்லா ஜீவன்களுடைய நற்குணங்கள் நன்றாக விளங்க ஒரு புத்தகமாய் எழுதி அச்சிட்டு அழகான கட்டடம் கட்டிப் பிரசுரம் செய்திருக்கிறார். வாயில்லா ஜீவன்களுடைய சாமர்த்தியத்தை விளக்கும் இந்த அதிசயமான கதையைப் பெரிய புத்தகமாக அச்சிட்டதுமாத்திரமே போதாது; தனியே ஒரு துண்டுக்கடிதத்தில் அச்சிட்டு, அவைகளுக்கு ஆலோசிக்கும் திறமையில்லையென்று வீண்வாதம்செய்கிற பல பிரஜைகளும் பார்த்துப்படித்துப் புத்தியுள்ளவர்களாகும்படி விசேஷமாகப் பிரசுரப்படுத்த வேண்டுமென்றும் அநேகர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

விஷமான மாமிசம்.

குடியினால் உண்டாகும் கொடுமையை அடக்க வேண்டிய காரியத்திற்கு விசாரணைத்தலைவராக ஏற்பட்ட பெரியவர் ஒருவர் சொல்வதாவது,—"இனி இந்தவிஷயத்தில் எந்தக்காரியமும் செய்வது சாத்தியமென்று எனக்குத் தோன்றவில்லை இப்பொழுது நடந்துவருகிறபடியே காரியங்கள் நடக்கும்படி இன்னுஞ் சிலநாள் விட்டுவைப்போமானால், குடிப்பதனால் உயிர்களுக்கும், பொருள்களுக்கும், தேகசௌக்கியத்திற்கும் உண்டாகும் அபாயம் வெகு சீக்கிரத்திலேயே மிகவும் அதிகமாகிவிடும். ஒவ்வொருவனுடைய பொருள்முதலியவைகளுக்கு மாத்திரமேயல்ல, சகவாஸதோஷத்தினால் தேசத்தார் எல்லாருக்குமே அதிசீக்கிரத்தில் மிகுந்த அபாயம் சம்பவித்துவிடுமென்று பயப்படவேண்டியதாயிருக்கிறது. ஆனதுபற்றி லாகிரியான பலவகைச் சாராயங்களை யுண்டாக்குவது, விற்பனைசெய்வது முதலான வியாபாரங்களை அடியோடு ஒழித்துவிடும்படி யோக்கியர்களான சகல மனிதர்களும் கிளம்பிப் பாடுபடவேண்டியகாலம் வெகுசீக்கிரமே வந்துவிடுமென்று தோன்றுகிறது" என்று சொல்லுகிறார்.

அப்படிப்பட்ட காலம் நாளுக்குநாள் நெருங்கிக் கொண்டுவருகிறதென்பது நிச்சயம். இதேவிதமா

கவே எளிய நாற்கால் ஜந்துக்கள் விஷயத்தில் செய்யப்படும் பயங்கரமான கொடுமைகள் நாளுக்கு நாள் விசேஷமா யதிகப்பட்டுக்கொண்டு வருவதைப் பார்த்தால், அதை யடக்குவதற்குத் தக்கமுயற்சி எடுத்துக்கொள்ளவேண்டிய காலமும் இப்பொழுது நெருங்கி வந்துவிட்டது என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். பல வருஷங்களாய் இவ்விஷயத்தில் உபேக்ஷையாயிருந்துவிட்டு இப்பொழுதே சிலர் ஊக்கமாய்ப் பாடுபடத் தொடங்கியிருக்கிறார்கள். ஆடு மாடுகளை யடிக்குமிடங்களிலும், அப்படி யடிப்பதற்காக அவைகளை வண்டிகளிலேற்றி ஓரிடத்திற்கு ஓரிடம் அனுப்புவதிலும் உள்ள அக்கிரமங்களைத் தெரிந்துகொண்டு, அப்படி வருத்தப்படும் ஜீவன்களின் மாமிசத்தைப் புசிப்பதனால் வரும் அபாயம் இப்படிப்பட்டதென்று கண்டு, அதைப்பற்றி ஆலோசிக்க அநேகர் ஆவேசங்கொண்டிருக்கிறார்கள். ஆனாலும், இந்த வியாபாரத்திலுள்ள பயங்கரமான கொடுமைகளைக் கவனிக்க ஒருவரும் இன்னும் ஏற்ற முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை. மற்ற விஷயங்களைப்போலவே இதுவும் முக்கியமாக கவனிக்கத்தக்கதேயாம்.

வாயில்லா ஜீவனை வதைக்கும் கொடுமை.

காலிபோர்னியாவிலே அநேகர் தாம் தின்ற மாமிசமே தங்களுக்கு விஷமாகித் துன்பமடைந்தார்களென்று தேசோபகாரி ஒருவர் விசனப்பட்டுச் சொல்லுகிறார். அதனாலுண்டான அபாயம் மிகவும் அஞ்சத்தக்கதாயிருந்ததனால், அவர்களில் ஒருவருக்கு வைத்தியம் செய்யப்போன வைத்தியசாஸ்திரி, அந்த நோயாளி புசித்தது எந்த ஜீவனுடைய மாம்சமோ, அது கொல்லப்படும் காலத்தில் எப்படிப்பட்ட நிலையிலிருந்ததோ, அவ்விஷயங்களை நுட்பமாக விசாரித்தறிய ஆவல்கொண்டார். அப்படியே விசாரணைசெய்ததில், அது ஒரு பெரிய எருதின் மாமிசமென்றும், அந்த எருது கொல்லப்படும் காலத்தில் ஒருநோயு மில்லாமல் தேகசௌக்கியத்துடனே மிகவும் பலசாலியாயிருந்ததென்றும் அதை யடித்த கசாப்புக்காரன் சொன்னான். ஆனால், ‘கொல்வதற்காகக் கொண்டுவரும்பொழுது அந்த ஜீவன் தன்னுயிரைக் காத்துக்கொள்ள மிகுந்த மூர்க்கத்துடனும், தைரியத்துடனும் போராடிய போராட்டம் இவ்வளவென்று சொல்லமுடியாது; தன்னைப் பிடிக்க வந்தவர்களை வெகுதீரமாய் எதிர்த்துத் தன்னாலானவளவு பாடுபட்டது. இரண்டொரு மணிநேரம் வரையில் உரத்து முக்காரம் போட்டும், கால்களால் நிலத்தை யறைந்தும், இன்னும் தன்னால் கூடுமான பலமுயற்சிகள் செய்தும், தன் பிராணனைக் காப்பாற்றிக்கொள்ளக் கஷ்டப்பட்டது. ஐயோ! கடைசியில் அந்த எளிய ஜீவன் கொலையாளி கையில் அகப்பட்டுக் கொலையுண்டது. அதனுடைய மாமிசமே விற்பனையானது. அது தான் அதைத் தின்றவர்களுக்கு மேற்சொன்னபடியே நஞ்சாக முடிந்தது’ என்று அத்தருணத்தில் அந்த அகோரத்தைக் கண்ணாரப் பார்த்துக்கொண்டிருந்த ஜீவகாருணியமுள்ள ஒருவர் சொல்லுகிறார்.

அந்த ஜீவன் தன் பிராணனைப் பாதுகாத்துக் கொள்ளப் பலவிதமாகப் போராடியதனாலும், அதைக் கொலையாளி தன் கைவசமாக்கிக் கொள்ள அதிகமாய் அடித்து இம்சித்துப் புண்படுத்தியதினாலும், அந்த எளிய ஜீவனுடைய உதிரமெல்லாம் பொங்கி நோய்க்கிடமாகி, அதன் மாமிசம் முழுமையும் விஷமாகி விட்டது. கொல்லப்படும் காலத்தில் வாயில்லா ஜீவன் படும்பாட்டை நாம் இங்கே சிறிதளவே சொன்னோம்; முழுமையும் எடுத்துச் சொல்ல நமக்கு மனம் துணியவில்லை; வாயுமெழவில்லை. வாயில்லா ஜீவன்களின் இறைச்சி தமக்கு விஷமாவது ஒருபுறமிருக்கட்டும்; அவை கொலைபாதகர் கையில் அகப்பட்டுப் பிராணனைப் பறிகொடுக்கும் தருணத்தில் படும் இம்சைகள் முழுமையும் காதுகொடுத்துக் கேட்பார்களானால், அப்படிப்பட்ட ஜீவன்களின் மாமிசத்தை எப்படிப்பட்ட கொடிய நெஞ்சர்களும் புசிக்கத் துணியார்களென்று நாம் நிச்சயமாய்ச் சொல்லுவோம்.

ஜீவகாருணியமுள்ளவர்கள் செய்யவேண்டிய காரிய மென்ன?

குதிரைகள் நமக்குச் செய்யும் அருமையான பல காரியங்களில் முக்கியமான ஒன்று, நெருப்புக் கொள்ளைக்கு அகப்படாமல் நம்முடைய பிராணன்களையும் பொருள்களையும் காப்பாற்றுவதாம். பெரிய பெரிய மாடமாளிகைகளும், பண்டசாலைகளும் நெருப்புப் பற்றிக்கொண்டு எரியும்பொழுது, அந்தப் பெருந்தீயை அவிப்பதற்காகத் தண்ணீர் இறைக்கும் யந்திரங்களையும், அதற்கு வேண்டிய அதிகாரிகளையும், மற்றும் பல சாமான்களையும் குதிரைகள் விரைவாக அவ்விடத்தில் கொண்டு சேர்க்காவிட்டால், கோடி கோடியாய் விலைபெற்ற பண்டங்களும், பிராணன்களும் தீக்கு இரையாய்ப் போய்விடுமல்லவா? அவ்வளவு பொருள்களையும், பிராணன்களையும் தக்க தருணத்தில் உதவிசெய்து காப்பாற்றுவது குதிரைகளேயல்லவா? இப்படி மனிதருக்கு மகோபகாரம் செய்யும் நாற்கால் ஜீவனான குதிரைகள் நெடுநாள் நமக்கு உழைத்து, கடைசியில் உழைக்கச் சக்தியில்லாமல் கிழமாகி விடும்காலத்தில், நாம் அவைகளுக்கு ஒரு வருத்தமும் கொடாமல் ஆயுளளவும் பரிவுடனே பாதுகாத்து அவைகளுக்கு வேண்டிய சௌக்கியத்தை உண்டாக்குவது நமக்குப் பெரிய தர்மமல்லவா? தள்ளாத வயதில் அவைகளை அனாதரவு செய்வதைப்பார்க்கிலும் பெரிய பாவமும் அக்கிரமமும்

அநியாயமும் வேறொன்றுண்டோ? வாழ்நாளெல்லாம் உழைத்து உடல் மெலிந்துபோன தள்ளாத குதிரைகளைப் போஷிக்க இத்தேசத்தில் இதுவரையில் ஒரு ஏற்பாடும் செய்யப்படவில்லை. அமெரிக்கா முதலான தேசாந்தரங்களில் தர்மப் பிரபுக்கள் சிலர் ஏற்பட்டு, புல் விளையும் விசாலமான புலங்களை விலைக்கு வாங்கி, அவைகளுக்குத் **தள்ளாத குதிரைத்தோட்டம்** அல்லது **குதிரைச்சுவர்க்கம்** என்று பெயர் வைத்து, உழைக்கச் சக்தியில்லாமல் உடல் மெலிந்துபோன குதிரைகளைத் தாமே விலைக்கு வாங்கித் தம் தோட்டத்தில் விட்டுப் போஷித்துவருகிறார்கள் என்று முன்னமே சொல்லியிருக்கிறோம். கிழமாய்ப்போன குதிரைகள் அத்தோட்டங்களில் கட்டுவாரும் பிடிப்பாரும் இல்லாமல் எங்கும் யதேச்சையாய்த் திரிந்து வேண்டிய புற்களை வயிறார மேய்ந்து தேவ போகமாய்த் தமது மிகுந்த வாழ்நாளை அவ்விடத்திலேயே கழிக்கின்றன. நெடுநாள் நமக்குழைத்த நன்றியுள்ள நேசர்களான வாயில்லா ஜீவன்களிடத்தில் தமக்குள்ள உபகார சிந்தையை வெளியிட்டுத் தள்ளாத வயதில் அவைகளை இப்படிப் பரிவுடனே போஷிக்கும் பிரபுக்களல்லவோ புண்ணியவான்கள்.

இப்படிப்பட்ட தருமத் தோட்டங்கள் தள்ளாத குதிரைகளுக்கு நமது தேசத்தில் ஏற்படாதிருப்பது பெரிய குறையல்லவா? உழைக்கச் சக்தியில்லாத கிழக்குதிரைகள் வண்டியில் கட்டப்பட்டு வருத்தப்படுவதைப் பிரதிதினம் நாம் அநேகமாய்த் தெருக்களில் பார்க்கிறோம். தாம் நெடுநாள் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பொருளை வீணில் பறிகொடுத்துப் பெருந்துக்கமடைந்து தாமும் பேர் ஊர் தெரியாமல் போய்விடுவதைப்பார்க்கிலும், மேலே சொன்னபடி ஜீவகாருணியமான காரியங்களைச் செய்து பிரசித்தி சம்பாதிக்க முயன்றால், எவ்வளவு பெருமையாயிருக்கும்! கடவுளுடைய கருணைக்கும் பாத்திரமாகக் கூடுமே.

"தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று" — எனத்

திருவள்ளுவ நாயனாரும், பரோபகாரம் செய்து பிரசித்தி சம்பாதிக்காத மனிதர்கள் பூமியில் பிறப்பதினும் பிறவாமலிருப்பதே நலம் என்று சொல்லுகிறார்.

மின்சாரவண்டியைத் திடீரென்று நிறுத்தினது.

மேனாட்டில் ஒரு பெரிய பட்டணத்திலே தெருக்களில் செல்லும் மின்சார வண்டியை ஓட்டுகிறவன் ஒருவன் சிலநாளைக்கு முன்னே தான் வேகமாகச் செலுத்திக்கொண்டுபோன ஒரு மின்சார வண்டியை, வண்டியோடும் பாதையில் வந்து நின்ற ஒரு எளிய நாயின் உயிரைக் காப்பாற்றும் பொருட்டுத் திடீரென்று நிறுத்தினான். வெகு வேகமாய் ஓடின வண்டியை அப்படித் திடீரென்று நிறுத்தினது, வண்டியிலேறிச் சென்ற பயங்காளியான பிரயாணிகள் பலருக்கு உடம்பில் அதிகமான அதிர்ச்சியையும், அச்சத்தையும் உண்டாக்கியிருக்கலாம். வண்டியோடும் வழியிலே வந்து நின்ற அந்த நாய், வண்டி வெகு சமீபத்தில் வந்துவிட்டதைக் கண்டு மிகவும் பயந்து திகைத்து, ஒன்றும் தோன்றாமல் அப்படியே நின்றுவிட்டதனால், அது வண்டியின் கீழ் அகப்பட்டு நசுங்கிவிடப் போகிறதே என்று இரக்கங்கொண்டு வண்டியோட்டுகிறவன் திடீரென்று வண்டியை நிறுத்திவிட்டான். அதைக் கண்டு, ஒரு அற்பமான நாயின் உயிரைக் காப்பாற்றுவதற்காக இத்தனைப் பிரயாணிகளுக்கு உடம்பு அதிர்ந்து அதிகமான வருத்தமுண்டாகும்படி ஏன் இப்படி வண்டியை நிறுத்தவேண்டுமென்று, அதில் ஏறிச் சென்றவர்களில் சிலர் அந்த வண்டிக்காரன்மேல் குற்றம் கூறினார்கள்

இது இப்படியிருக்க, அதற்குச் சிலநாள் முன்னே ஒரு சிறுபெண், நடுத்தெருவில் ஒரு அபாயத்தில் அகப்பட்டுக்கொண்ட நாய் ஒன்றைப் பிராணன் போகாமல் காப்பாற்றி, அந்த நாயோடுகூடவே போய்க்கொண்டிருந்தாள். அந்தப் பெண்ணைக் கண்டுசிலர்பேசினபொழுது, தன்னுடைய அருமையான நாயொன்று மின்சார வண்டியின்கீழ் அகப்பட்டுக்கொண்டு அநியாயமாய் இறந்துபோயிற்று என்று சொல்லி அவள் மிகவும் விசனப்பட்டாள். இந்தச் சிறுபெண்ணுக்கிருந்த இரக்கமும், ஜீவகாருண்யமும், வண்டிக்காரன்மேல் குற்றம் கூறின பிரபுக்களுக்கு இல்லாமல் போய்விட்டதல்லவா? அந்த நாய் வண்டியின்கீழ் அகப்பட்டுக்கொண்டு இறந்துபோயிருந்தால், அந்த நாயின் சொந்தக்காரன் இந்தச் சிறுபெண் போலவேதானே விசனப்படுவானென்பதையாவது அவர்கள் நினைக்கவேண்டாமா? மேலும், அந்த நாயின்மேல் வண்டியேறி அதன் உடல் நசுங்கும்பொழுது, அது உயிர் துடித்துப் பரிதாபமாய்ப் புலம்பிக் கீச்சிடுவதைக் காதினால் கேட்பதும், அப்படி அது உடல் நசுங்கி உயிரிழப்பதைக் கண்ணால் காண்பதும், எப்படிப்பட்ட கல்நெஞ்சரான மனிதருக்கும் மிகுந்த சங்கடத்தையும் பரிதாபத்தையும் உண்டாக்குமல்லவா? இதை நாம் இப்பொழுது மனதால் நினைக்கும்பொழுதே நமக்கு உடம்பு நடுங்குகிறதே!

சிறு குழந்தைகளும், மாடுகளும், வண்டிகளும் அதிகமாய்ச் சஞ்சரிக்கிற வீதிகளில் மின்சார வண்டிக்காரர்கள் பலர் மிகவும் அஜாக்கிரதையாய் வண்டியை ஓட்டிக் கொடிய அபாயங்கள் அநேகம் விளைவித்திருக்கிறார்களென்பதைக் கேட்டால், மேலே கூறியபடி வண்டிக்காரன்மேல் பிரயா

ணிகள் பழிகூறியதற்காக நாம் அவ்வளவாய் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. ஆனாலும், இந்த நாயின்மேல் வண்டியைச் செலுத்தாமல் இதனுயிரைக் காப்பாற்றித் தனக்குள்ள ஜீவகாருணியத்தை வெளியிட்டுப் பெருமைபெற்ற இந்த வண்டிக்காரன்போலவே, மிகுந்த ஜாக்கிரதையுடனே வண்டியோட்டும் இரக்கமுள்ள மனிதர்களும் சிலர் இருக்கிறார்களென்று கேட்டு நாம் மிகவும் சந்தோஷப்படுகிறோம்.

குதிரைகளுக்குப் பிரீதி உண்டோ?

ஒரு குதிரை தன் எஜமானனைக் காப்பாற்றினது.

ஒரு பிரபு பட்டணத்துக்குச் சில மைல் தூரத்திற்கப்பால் ஒரு கிராமத்தில் வசித்துக்கொண்டிருந்தான். அவனுக்கு உடம்பு சௌக்கியமில்லையென்றும், உடனே ஒத்தாசை செய்யப் புறப்பட்டு வரவேண்டுமென்றும், பட்டணத்திலிருந்த அவனுடைய நண்பன் ஒருவனுக்கு ஒருநாள் நடுப்பகலில் கடிதம் வந்தது. அதைக் கண்டவுடனே அந்த நண்பன் தனக்குப் பிரியமான குதிரையின்மேலே ஏறிக்கொண்டு தன் இரண்டு நாய்களைத் துணையாகக் கூட்டிக்கொண்டு அவ்வூருக்குப் போகப் புறப்பட்டான். பட்டணத்திலிருந்து அவ்வூருக்குப் போகச் சமீபமான கால்வழி யொன்றுண்டு. சீக்கிரமே தன் துணைவனைப் போய்ப் பார்க்க வேண்டுமென்று பட்டணத்தான் அந்தக் கால்வழியே குதிரையை ஓட்டிக்கொண்டு போனான். அந்தக் கால்வழியில் மத்தியிலே இடைச்சேரி ஒன்று உண்டு. அதற்குச் சமீபத்தில் அவ்வூர் இடையன் ஆடுகளை மடக்கி வைத்திருந்தான். ஆடுகளுக்குக் காவலாக மிகக் கொடிய நாயொன்று அங்கே படுத்துக்கொண்டிருந்தது. பட்டணத்து மனிதன் குதிரைமேலேறிக்கொண்டு வெகு சந்தோஷமாய் வருவதை அந்த நாய் வெகு தூரத்திலேயே கண்டு பயங்கரமாகக் குரைக்க ஆரம்பித்தது. அதைக்கேட்டுப் பிரயாணி, அந்த நாய் கட்டப்படாமல் அவிழ்த்துவிடப்பட்டிருக்கிறதென்றும், தங்களை எதிர்க்கத் துணிந்திருக்கிறதென்றும் தெரிந்துகொண்டான். இவனோடு கூடப்போன இரண்டு நாய்களில் ஒன்று மிக்க வலியுள்ள பெரிய கறுப்புநாய். மற்றொன்று சிறியநாய். ஆட்டுப்பட்டி நாய் முதலில் பெரிய நாய்மேல் பாய்ந்து அதனை எதிர்க்கத் தன்னால் முடியாதென்று கண்டு, உடனே சிறியநாயின்மேல் பாய்ந்தது. இந்த நாய்கள் உறுமிக் குரைப்பதைக் கேட்டுக் குதிரை மிகவும் பயந்து நடுங்கிப்போயிற்று. அதைப்பார்த்து எஜமானன் அதினின்றும் கீழே இறங்கிவிட்டான். அதைக் கண்டவுடனே ஆட்டுநாய் சிறியநாயை எதிர்ப்பதை விட்டு இந்த மனிதன்மேல் திரும்பிவிட்டது. குதிரையோட்டுவதற்காக வைத்திருந்த சாட்டையொன்று தவிர, இவன் கையில் மற்றொரு ஆயுதமும் இல்லை. அந்தச் சாட்டையால் அவன் தன்னால் கூடியவனாயில் ஆட்டுநாயை அடித்து ஓட்டித் தப்பித்துக்கொள்ளப் பார்த்தான். அந்தப்பொல்லாத நாய் இந்தச் சாட்டையடியைச் சிறிதும் லக்ஷியம்பண்ணாமல் அவனை அதிகமாய் உபத்திரவிக்கத் தலைப்பட்டது. சாட்டைக் கொம்பினால் அவன் அந்த நாயின் ஒரு கண்ணைக் குத்திவிட்டான். ஆனாலும், அதனால் அதற்குப் பின்னும் அதிகமான கோப முண்டாகிவிட்டதே தவிர, அதன் கொழுப்பு அடங்கவில்லை. இதற்குள் பிரயாணியின் சிறியநாய் அவன் பின்னேயிருந்து சற்று இளைப்பாறியதனால், இத்தருணத்தில் அது சிறிது உற்சாகங்கொண்டு தன் எஜமானனைக் காப்பாற்ற முன்னே வந்தது. ஆட்டுநாயோ, அந்தச் சிறிய நாயைக் கீழே புரட்டித் தள்ளிவிட்டு, மறுபடியும் பிரயாணிமேலேயே பாய்ந்தது.

அந்தச் சமயத்தில் பட்டணத்தான் மிகவும் பயந்து, தன் பிராணன் தப்புவது அசாத்தியமென்று நினைத்துவிட்டான்; ஏனென்றால், அந்த ஆபத்துவேளையில் அவனுக்கு ஒத்தாசை செய்ய அண்டையில் ஒருவருமில்லை. இப்படியிருக்கையில், வேகமாய் ஓடிவருகிற சத்தமொன்று அவன் காதில் கேட்டது. ஓடி வருவதற்கு அங்கே யார் இருக்கிறார்கள்? அது, அவனுடைய அருமையான குதிரை ஓடிவந்த சத்தம். அது அவனுடைய சங்கடத்தைப் பார்த்துச் சரேலென்று வந்து, திடீரென்று தன் எஜமானனுக்கும் நாய்க்கும் நடுவே வந்து நின்று, நாய் அம்மனிதன்மேல் பாயவொட்டாமல் தடுத்து, நாயை எதிர்க்க ஆரம்பித்தது. அதுகண்டு ஆட்டு நாய், குதிரை தன்னைப்பார்க்கிலும் பெரிய பிராணியென்றும் தன்னுயிரை வாங்கிவிடுமென்றும் எண்ணிப் பயந்து, புறங்காட்டியோடத் தலைப்பட்டது. ஓடுகிறவனைக் கண்டால் துரத்துகிறவனுக் கெளிதல்லவா? நாய் ஓடவே, குதிரை மிகவும் சந்தோஷமாய் அதை வெகுதூரம் துரத்திக்கொண்டுபோய்க் கண்ணில் காணாத இடத்தில் சேர்த்துவிட்டு, சாந்தமாய்த் தன் எஜமானனிடம் திரும்பி வந்து சேர்ந்தது. அவனுக்கு வந்த கெண்டம் இவ்வளவோடு நீங்கிற்றல்லவா? அப்புறம் அவன் குதிரையின்மே லேறிக்கொண்டு சுகமாகச் சீக்கிரமே ஊர்போய்ச் சேர்ந்தான். நடுக்காட்டில் பட்டிநாய் இப்படி எதிர்த்தபொழுது குதிரை நடுவே வந்து தன் எஜமானனுயிரைக் காப்பாற்றியது ஒரு ஆச்சரியமல்ல; அவனுக்குத் துணையாய்ப் போன கறுப்புநாய் அவ்வளவுநேரம் அங்கே சிறிதும் தலைகாட்டாமல் ஒரு வேலியின் பக்கத்திலே போய் ஒளித்துக்கொண்டிருந்ததுதான் பெரிய ஆச்சரியம்.

களவுபோன குதிரையைக் கண்டுபிடித்தது.

குதிரைகளுக்குத் தம் சொந்தக்காரரிடத்தில் அதிகமான பிரீதி கிடையாதென்று சொல்லி மறுக்கிறவர்களுக்கு 'அதன் உண்மை நன்றாக விளங்கும்படி மற்றொரு கதை சொல்லுவோம். ஒரு குடியானவனுடைய இரண்டு குதிரைகளைக் குதிரைக் கள்ளனொருவன் திருடிக்கொண்டு போய் விட்டான். அந்தக் குதிரைகள் இருக்குமிடத்தைக் குடியானவன் எப்படியோ தெரிந்துகொண்டு அந்தக் கள்ளனைப் போய்க் கேட்டதில், அவை தன் குதிரையே என்று சொல்லி அவன் கொடுக்கமாட்டேனென்றான். பிறகு சொந்தக்காரன் நியாயஸ்தலத்திலே போய்த் தன் குதிரையை வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று முறையிட்டுக்கொண்டான். 'அவை உன் குதிரை யென்பதற்குச் சாக்ஷி ஏதாவது உண்டா' என்று நியாயாதிபதி கேட்க, 'எனக்கு மற்றொரு சாக்ஷியுமில்லை; என் குதிரையே எனக்குப் பெரிய சாக்ஷி' என்று குடியானவன் சொன்னான். அதைக்கேட்டு நியாயாதிபதி 'அப்படியானால் நாம் அந்தக் குதிரை இருக்குமிடத்திற்குப் போவோம்' என்று சொல்லி அந்தக் குதிரை கட்டியிருக்கும் குதிரைச்சாலைக்கு அவனை யழைத்துக் கொண்டு போனான். அவர்கள் அவ்விடம் போகையில், குடியானவனது குரலைக் கேட்டவுடனே அவனுடைய குதிரைக ளிரண்டும் வெகு சந்தோஷமாய்க் கனைத்துத் தமக்குண்டான ஆனந்தத்தைப் பலவிதமாக வெளியிட்டன. பிறகு நியாயாதிபதி அந்தக் குதிரைகளை அபகரித்தவனை யழைத்து, அவைகள் இரண்டையும் இங்கே அவிழ்த்துக் கொண்டுவா என்று கட்டளையிட்டான். அவன் கிட்டப் போனவுடனே அந்த இரண்டு குதிரைகளும் அவன் மூர்ச்சித்துக் கீழே விழும்படி ஓங்கி உதைத்தன. அதைக் கண்டு நியாயாதிபதி குதிரையின் நல்லறிவுக்கு மிகவும் வியந்து, அவை குடியானவனுடைய குதிரைகளேயென்று தெரிந்துகொண்டு அவைகளை உடையவனுக்கே கொடுத்து, களவு செய்தவனுக்குக் கொடிய தண்டனை விதித்தான்.

இயற்கை விளக்கக் கவிகள்.

வன்பசிகொள் சிங்கமத யானையல தியாதும்
தன்பசி தனக்குநுக ராதுதளர் நாய்கள்
என்புசிறி தீரமில வேனுமிரை யாக
அன்பினொடு கௌவியெயி றழியினும் விடாவே.

ஆனைபசி கொள்ளினு மதற்குரிய பாகன்
தான்வலிய வேயிரை தரத்தர வருந்தும்
ஈனமொடு நாயுதரம் எக்கிமுக நோக்கி
வானுனி குழைத்துதவ வாங்கியுணு மெச்சில்.

நச்சுமா மரத்தைவைத்து நளிகட லமிர்தம்பெய்தும்
பச்சிலை முதலாக்கொல்லும் பாம்புபால் பெய்திட்டாலும்
குச்சித* விடத்தைநல்கும் குவித்தசர்க் கரைமேனட்டு
மிச்சமாத் தேன்பெய்தாலும் வேம்புதன் கசப்புமாறா.

* குச்சிதம் = அருவருப்பு.

பகற்கெலாங் குருட்டுக்கண்கள் பார்வைக்கும் பிடிபடாவாம்
முகத்திலே அழகுமில்லை மொழியினு மதுரமில்லை
அகத்தினு லறிவுமில்லை யாருமிங் கிதையெண்ணார்கள்
சகத்திலே இதன்பேர்சொன்னால் சத்துரு மிகுதியாமே. [பஞ்சதந்திரம்.]

நீரிடை யுறங்குஞ்சங்கம் நிழலிடை யுறங்குமேதி
தாரிடை யுறங்கும்வண்டு தாமரை யுறங்குஞ்செய்யாள்
தூரிடை யுறங்குமாமை துறையிடை யுறங்குமிப்பி
போரிடை யுறங்குமன்னம் பொழிலிடை யுறங்குந்தோகை. [கம்பன்.]

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1906.